விலை: சதம் 60

# ஈழநாடு

THE EELANADU

மலர் 23 ஆனி 18 ஷஃபான் 29 இதழ் 138

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 2-7-1981

யாழ். நூல்நிலையத்துக்கு உதவ

## தமிழர் ஆசிரியர் சங்கம் பாரியதிட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலையத்துக்கேற்பட்ட பாதிப்பை ஓரளவுக்காவது பூர்த்தி செய்வதற்கான ஆக்கபூர்வமான திட்டங்களை செயல்படுத்துவதற்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் முன்வந்துள்ளது.

ஃ புத்தகவாரம் ஒன்றைபிரகடனம் செய்து ஆசிரியர்கள், மாணவர்கள் நாடுபூராவும் சென்று புத்தகங்கள் சேகரித்தல்.

ஃ கொடித்தினம் ஒன்றை நடாத்தி குறிப்பாக பாடசாலை மாணவர்கள் குறைந்தது 1ரூபாவீதம் நிதிசேகரித்து அந்நிதி மூலம் புத்தகங்களைச் சேகரித்தல்.

ஃ 'இப்ரு' உலக ஆசிரிய சம்மேளனத்துடன் தொடர்பு கொண்டு, நூல்கள் பெற்று அன்பளிப்பது.

இத்திட்டங்கள் சம்பந்தமாக, இ. த. ஆ. சங்கப் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவமும் யாழ். மாவட்டச் செயலாளர் திரு. சி. சிவபாலசிங்கமும், யாழ். மாநகராட்சி மன்ற முதல்வர் திரு. இராஜா விசுவநாதனையும், விசேஷ ஆணையாளர் திரு. சிவஞானத்தையும் சந்திக்கவுள்ளனர்.[மா

## பல்லடம் பிரமுகர் யாழ். விஜயம்

[யாழ்ப்பாணம்]

நாடி வைத்திய நிபுணரும், காஞ்சி காமகோடி பீடத்தைச் சேர்ந்த பல்லடம் இந்து சமயமன்றச் செயலாளருமான டாக்டர் கே. ஏ. சிதம்பரம் காங்கேயன் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட சில இடங்களைப்பார்வையிட்ட டாக்டர் சிதம்பரம் காங்கேயன் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனையும் சந்தி ந 5"

★ அரசாங்கத்துக்கு - அமிர்தலிங்கத்துக்கு எதிரான

# அவநம்பிக்கை பிரேரணைகள்:

# திகதி குறிப்பிடாமல் அறிவிப்பு

## விவாதப்பற்றி ஏழாம் திகதி முடிவுசெய்யப்படும்

(கொழும்பு)

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலை அடுத்து அரசாங்கத்திற்கு எதிராக் எதிர்க்கட்சியினர் சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்திற்கு எதிராக அரசாங்கக் கட்சி எம். பி.க்கள் சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையையும் பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் திகதி குறிப்பிடப்படாமல் வெளியிடப்பட்டுள்ளன.

அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தமிழர் விடுதலைக் கூட்டணியையும் சுதந்திரக்கட்சியையும் சேர்ந்த 17 எம். பி.க்களும் எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் அரசாங்கத்தைச் சேர்ந்த 37 எம். பிக்களும் கைச்சாத்திட்டுள்ளனர்

இப்பிரேரணைகளை விவாதிப்பதற்கான 'திகதி இம்மாதம் 7-ம் திகதி. பாராளுமன்றக் கட்டிடத்தில் நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்சப்படும்.

## அமிருக்குஎதிரான பிரேரணை

''பல்லாண்டுகளாகத் தமிழ் மக்களைத் துன்புறுத்துகின்ற பிரச்னைகளுக்குத் தற்போது தமிழ் ஈழத்தை அமைப்பது ஒன்றே நிலையான ஒரு தீர்வாகும்.

''இலக்குத்தான் முக்கியமானது, அதனை அடைந்ததற்கான பெருமையை யார் பெறுகிறார்கள் என்பது முக்கியமல்ல, இத்தருணத்தில் வன்முறை பலனளிக்காதென எமது கட்சி கருதுகிறது. வேறு எவராவது இதற்கு மாறுகச் சிந்திப்பாராயின் இது அவரது பொறுப்பு'' என்று 5-1-81ந் திகதி 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் கௌரவ உறுப்பினரும், எதிர்க்கட்சித் தலைவருமானவர் அளித்துள்ள பிரத்தியேகப் பேட்டியில் கூறியதாகச் செய்தி வெளியிடப்பட்டுள்ளமையினாலும் —

[2] ''இலங்கை தமிழருக்கு உரியது. தமிழர் தொழில் தேடி இலங்கைக்குச சென்றார்கள் •என்று கூறுகின்றனர். ஆனால் இலங்கை தமிழருக்கு உரியது. இந்நாடு தமிழ் மன்னர்களால் ஆளப்பட்டது. 1952ம் ஆண்டு இலங்கை அரசு ஒரு விசேட முத்திரை ஒன்றை வெளியிட்டது அந்த முத்திரையில் விஜயா எனப்படுபவரின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. இந்த விஜயா யார்? இந்த விஜயா தான் சிங்கள மக்கள் இலங்கையில் குடியேறக் காரணகர்த்தாவாக இருந்தவர். எனவே தொழில் தேடி இலங்கைக்கு வந்தவர்கள் சிங்களவர்களே.

''1610-ம் ஆண்டு போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்ற வந்தபோது வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒரு சுதந்திர தமிழ் ராஜ்யம் இருந்தது. அந்த ராஜ்யத்தைக் கைப்பற்ற போர்த்துக்கேயர் 100 ஆண்டுகள் போராடினர்.

### 'இந்தியா முன்வர வேண்டும்'

முஜிபுர் ரஹ்மான் தலைமையில் பங்களாதேஷ் விடுதலைப் போராட்டம் நடந்தபோது இந்தியா அதற்கு உதவியது. இதே போன்று இலங்கைத் தமிழரின் சுதந்திரப் போராட்டத்திற்கும் உதவ இந்தியா முன்வர வேண்டும். இக்காரணத்துக்காக தமிழ் நாடு அரசியல் கட்சிகளின் சகல தலைவர்களையும் நான் சந்தித்து அவர்களது ஆதரவைக் கோரியுள்ளேன்.

''தமிழருக்கென ஒரு தனி நாடு வேண்டும். அத்தகைய தொரு நாடு இராவணன் தோன்றிய இலங்கையிலேயே நிறுவப்பட வேண்டும்'' என்று சென்னை தமிழர் நட்புறவுச் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட 5-வது அனைத்துலக

[6ம் பக்கம பார்க்க]

## அரசுக்கு எதிரான பிரேரணை

ஐக்கிய தேசியக் கட்சி அரசானது மூன்றரை வருடங்களாக தவறுன ஆட்சியுடன்-

[அ] இந்நாட்டு மக்கள்மீது தாங்கொணு பழுவைச் சுமத்தியுள்ளதாலும்-

[ஆ] ஜனநாயகத்தைப் பற்றிப் பிதற்றும் அதேவேளையில் மக்களின் ஜனநாயக உரிமைகளை மென்மேலும் பறித்துள்ளதாலும்-

[இ] சிறந்த வாழ்க்கை நிலையை உய்தும்பொருட்டும் அடிப்படை உரிமைகளைப்பாதுகாக்கும் பொருட்டுமான தொழிலாளவர்க்கத்தினரது நடவடிக்கைகளையும் அரசியல் எதிர்ப்புக்களையும் நசுக்கியுள்ளமையினுலும்-

[ஈ] அண்மையில் நடத்தப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில்:-

[1] நியமனப்பத்திரம்சமர்ப்பிக்கப்படும் காலத்தில் நிவாரண வேலைகளை ஆரம்பிப்பதற்கான கட்டளை வழங்கப்பட்டமை,

[2] தேர்தல் பிரசாரத்தின் போது அச்சுறுத்தும் உரைகளை ஆற்றியதோடு பெரும்பான்மை மக்கள் ஐ. தே. க. வுக்கு வாக்களிக்கவில்லை என்பதை தேர்தல் முடிவுகள் காண்பிக்கும் பிரதேசங்களில் உணவுமுத்திரை வாபஸ் பெறப்படுமெனவும் நிவாரண வேலைகள் நிறுத்தப்படுமெனவும் காணி உரிமை ரத்துச் செய்யப்படும் எனவும் அச்சுறுத்தும் பிரச்சாரத்தை ஐ. தே. க.வின் சார்பில் ஆதரவு தேடியோர் மேற்கொண்டமை,

[3] ஐ. தே. க.வுக்கு எதிரான பிரச்சாரங்களில் ஈடுபட்டவர்களும் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கூறியவர்களும் அரசாங்க ஆதரவாளர்களினுல் அச்சுறுத்தப்பட்டதோடு தொல்லைகளுக்கு உள்ளாககப்பட்டமையினுலும்.

[4] ஐ. தே. க.வுக்கு வாக்களிக்காதுவிடின் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்என சில அரச சேவையாளர்கள் வாக்காளர்களைப் பயமுறுத்தியமையினுலும்—

[5] பல வாக்கெடுப்பு நிலையங்களில் ஆள் மாருட்டங்

[6-ம் பக்கம் பார்க்க

"பரமேஸ்வரனின் சடலம்

# நீர்வேலியில் கிடப்பதாக பொலிஸ் அதிகாரி கூறினுர்

## கோப்பாய் உதவி அரச அதிபர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

''பரமேஸ்வரன் வீதியில் சென்றுகொண்டிருந்ததாகவும் வீட்டிற்குத் திரும்பும் இடத்தில் ஜீப் ஒன்று அவரை ஏற்றிக்கொண்டு சென்றதாகவும் மனேகான் என்னிடம் கூறினுர். இதனை நான் கோப்பாய் பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரிக்கு உடனேயே தொலைபேசியில் கூறினேன்.''

கோப்பாயைச் சேர்ந்த விவசாய உத்தியோகத்தர் பரமேஸ்வரனின் மரணவிசாரணையில் சாட்சியமளித்த கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் எஸ். கிட்ணர் மேற்கண்டவாறு கூறினுர்.

யாழ் நீதிமன்றத்தில் நீசவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் இம்மரணவிசாரணை நடைபெற்றது.

உதவி அரசாங்க அதிபர் கிட்ணர் மேலும் கூறியதாவது:

''நான் கோப்பாய் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றிவருகின்றேன். கடந்த மாதம் 3-ம் திகதி இரவு யாழ். மாவட்ட அவிருத்திச் சபைத் தேர்தல் வேலைகள் தொடர்பாகக் காரியாலத்தில் இருந்தேன், அங்கு அலுவலகக் காவலாளியும் இருந்தார். இரவு 8 மணியளவில் மனேகரன் வந்து 'தான் வீட்டுக்கேற்றடியில் நிற்கும்போது பரமேஸ்வரன் வீதியால் போனதாகவும், அவர் வீட்டுக்குத் திரும்பும் சமயம் ஜீப் ஒன்று வந்து ஏற்றிச் சென்றதாக்வும் கூறினுர். மனேகரனை எனக்கு முன்பு தெரியும். பரமேஸ்வரனைத் தெரியாது. ஜீப் நம்பரைத் தான் பார்க்கவில்லை என்றும் மனேகரன் சொன்னுர். ஜீப் விபரம் வேறு ஒன்

[6-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கூடுதல் பயன்தரக் கூடிய நல்ல இன செவ்விளனி தென்னங்கன்றுகள் விற்பனைக்குண்டு மில்க்வைற் யாழ்ப்பாணம் 0171

யாழ். அத்தியடி உப தபால் கந்தோருக்கு அருகாமையில் 4 பரப்புக் காணி பிரித்தும் கொடுக்கலாம். விபரங்களுக்கு: A. நித்தியானந்தராசா, பொன்னையா லேன், கண்ணுரிப்பண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டை. 0182)

## தேவை

கிறைண்டிங் மில்லில் வேலை செய்யத் தகுதியுடையவர்கள் தேவை. தேவாஸ் கிறைண்டிங் மில், 159/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0164

வெலிங்டன் சினிமா - மானிப்பாய். செட் ஒப்பரேட்டர், உதவி ஒப்பரேட்டர், ஹோல் போய் ஆகியவர்கள் தேவை. சொந்த முகவரியிட்ட கடித உறையுடன் விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவுதிகதி 6-7-81. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி 185, ஆஸ்பத்திரி வீதி, யாழ் நகர். 0172

கேட், கிறில் ஒட்டு வேலைகளில் அனுபவம் பெற்ற எலக்ட்ரிக் வெல்டர் Electric Welder) உடனே தேவை. கம்மாலை வேலையில் அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது. 4-07-81க்கு முன் நேரில் வரவும். லிங்கன் இரும்புத் தொழிற்சாலை, பிரதான வீதி. காங்கேசன்துறை. 0166

வெல்டேர்ஸ் தேவை புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைக்கு கிறில், கேற், வேலைகளில் நல்ல அனுபவம், நற்பழக்கம், நம்பிக்கை வாய்ந்த வெல்டேர்ஸ் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். க. பிரேமச்சந்திரன், 'சந்திராஸ் வெல்டிங் தொழிற்சாலை', 90, கண்டி வீதி, கிளிநொச்சி 0151

பிளேற்றின் மெசினைமைட்டர் உடன் தேவை. பயின்டிங். கொம்பசிங் தெரிந்தவராக இருத்தல் வேண்டும். வெள்ளிக்கிழமை நேரில் வரவும். ஸ்ரீ கிருஷ்ணா அச்சகம், 217, நாவலர் வீதி, (கடைச் சாமிஒழுங்கைக்கு அருகாமை) யாழ்ப்பாணம். (0177)

ஒன்று அல்லது ஒன்றரை மாத Alsatian அல்லது Alsatian cross Labrador ஆண் நாய்க்குட்டி உடனே தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 0179, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். [0179]

## பயிற்சி

புதிய குளிரூட்டல் பயிற்சி வகுப்புக்கள் விரைவில் ஆரம்பமாகின்றன. விண்ணப்பங்கள் 10-7-81க்கு முன்னர் கிடைத்தல் வேண்டும் அதிபர், ஐ. ஏ. ஆர். 615, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [0173]

## வகுப்புக்கள்

மின் இணைப்பு, மோட்டார் இயந்திரவியல், மின் ஒட்டுத் தொழில் நுட்பவியல் (Electrical Wiring, Motor mechanism Electrical Welding) 4 மாத செய்முறை அறிமுறைப் பயிற்சி வகுப்புகள் 11-7-81இல் ஆரம்பம். தங்குமிட வசதியும் உண்டு. C E T யாழ்ப்பாணக் கல்வி நிலையம், (சாந்தி சினிமாவிற்கு முன்னால்) 22, இராமையாச் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம், [0175]

# இந்திராவுக்கு பாக். அதிபர் விசேட செய்தி

புதுடில்லி, ஜூலை 1

பாகிஸ்தானில் உள்ள இந்தியத் தூதுவர் திரு. பாத்சிங் பாகிஸ்தான் ஜனாதிபதியிடமிருந்து இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு விசேடசெய்தி ஒன்றை கொண்டுவந்துள்ளார்

திரு பாத்சிங் பாகிஸ்தான் ஜனாதிபதிக் ஜெனரல் ஷியா வுல் ஹக்கைச் சந்தித்து சுமார் 50 நிமிடம்வரை பேச்சு நடத்தியபின்னரே நாடு திரும்பியுள்ளார்.

# "மக்கள் எனக்களித்த மாலைகளை என் வீட்டை எரித்தவர்கள் அணிந்து மகிழ்ந்தனர்"

## மட்டக்களப்பில் யாழ். எம். பி.

(மண்முனை நிருபர் இரா. துரைரத்தினம்)

எனது தொகுதி மக்கள் அன்பாக எனக்கு அணிவித்த மலர் மாலைகளை எனது வீட்டுக்கு தீ வைத்த தங்கள் சகாக்களுக்கு பொலிசார் அணிவித்தனர். எனது உயிரிலும் மேலாக நான் மதிக்கும் எனது மக்களின் மாலை அட்டூழியம் பல புரிந்த பொலிசாரின் கழுத்தை அலங்கரித்துக் கொண்டிருந்ததை என் கண்களால் கண்டேன்.

இவ்வாறு மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடந்த உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் எம் பி திரு வே யோகேஸ்வரன் தெரிவித்தார்.

அவர்மேலும் கூறியதாவது:

தேர்தல் கூட்டமொன்றில் உரையாற்றிய போது என்மீது அன்பு கொண்ட மக்கள் அழகான மலர் மாலைகளை எனக்கு அணிவித்தனர். அந்த அன்புப் பரிசை நான் என்றும் தட்டிக்கழிக்காமல் அப்படியே எடுத்து வந்துவீட்டில் வைப்பேன். சம்பவம் நடந்த அன்றும் மலர் மாலைகளை வீட்டு முன் அறையில் வைத்துவிட்டு தொலைபேசியில் நகரில் நடந்த அட்டூழியங்கள் தொடர்பாக இந்த நாட்டுப் பிரதமருடன் தொடர்பு கொண்டிருந்தபோதுதான் என் வீட்டில் துப்பாக்கி, இரும்புக்கம்பி, கத்திகளுடன் 200க்கு மேற்பட்ட காடையர்கள் புகுந்தனர் யோகேஸ்வரன் எங்கே? யோகேஸ்வரன் சாகவேண்டும் என்று கத்தினர்கள். இவர்களுக்கு நான் செய்த கொடுமை என்ன? ஏன் இப்படி என்னைத் தாக்குகிறார்கள்? நான் யாரிடம் கேட்க முடியும்! இறைவனிடம் தான் கேட்டேன். அப்பொழுதுதான் எனக்கு புரிந்தது. உங்களிடம் இருந்து என் உயிரும் உடமைகளும் பிரிக்கப்படும் காலம் நெருங்கிவிட்டது என, ஒருவாறு பின்பக்கமாக எனது மனைவியையும் அழைத்துக்கொண்டு ஓடிச் சென்று மதிலால் குதித்து வெளியில் சென்று பார்த்தபோது 'எனது வீடு, சொத்துக்கள், எனது மனைவியின் மாங்கல்யம் உட்பட எல்லாம் எரிந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்து சிவில் உடை தரித்தோரும், மற்றையோரும் ரசித்துக் கொண்டு இருந்தனர், குதூகலத்தால் ஆர்ப்பரித்தனர், இவை அனைத்தையும் கையால் ஆகாதவராய் பார்த்து கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தேன்,

வீட்டிற்கு தீ வைத்துவிட்டு வந்தவர்களிடம் வெளியில் நின்றவர்கள் யோகேஸ்வரன் எங்கே? மனைவி எங்கே என்று கேட்டபோது அவர்கள் வீட்டுக்குள் விட்டுக்கள் எரிந்து கொண்டிருக்கின்றனர் என குதூகலத்துடன் கூறினர். அப்போது எனது வீட்டு விறாந்தையில் நான் வைத்திருந்த மாலைகளை எடுத்துவைத்

5-ம் பக்கம் பார்க்க)

## மட்டுநகர் சைவ இளைஞர்

# யாழ். பொது நூலகத்துக்கு நூல்கள் அன்பளிக்கமுடிவு

(மண்முனை)

வன்செயல்களினால் தீக்கிரையாக்கப்பட்ட யாழ். பொது நூல் நிலையத்திற்கு நூல்கள் அன்பளிப்புச் செய்வதென மட்டக்களப்பு சைவ இளைஞர் மன்றம் தீர்மானித்துள்ளது

சங்க மண்டபத்தில் மன்ற அமைப்பாளர் எஸ். எஸ். சூரியகாந்தன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

அதனைத் தொடர்ந்து பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:-

யாழ். வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் உடனடியாக நிவாரணம் வழங்கவேண்டுமெனவும், இதற்குக் காரணமாக இருந்தவர்களை அரசாங்கம் மூடி மறைக்காமல் தகுந்த தண்டனை வழங்குவதுடன் இனிமேலும் இதுபோன்ற சம்பவங்கள் நிகழாமல் இருப்பதற்கு வழி வகுக்க வேண்டும் என அரசைக் கோருவது!

பாதிக்கப்பட்ட யாழ் எம் பி திரு வெ யோகேஸ்வரனுக்கும் ஈழநாடு பத்திரிகை நிறுவனத்துக்கும் அனுதாபம் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

இத்தீர்மானங்களை பிரேரித்து உரையாற்றிய மன்ற உபதலைவர் திரு ம சச்சிதானந்தசிவம் தமதுரையில்

கடந்த வன்செயல்களின் போது இந்து ஆலயம் உட்பட பத்திரிகை நிறுவனம், பொது நூல்நிலையம், மக்கள் பிரதிநிதி ஒருவரின் இல்லம் என்பனசேதப்படுத்தப்பட்டிருக்கின்றன இதுமனித வர்க்கமே வெறுக்கும் ஒருசெயலாகும் இந்து ஆலயங்கள் அழிக்கப்படுவதை இந்து மக்கள் மட்டுமல்ல எல்லாமதத்தவர்களும் ஒன்றுசேர்ந்து எதிர்க்கவேண்டுமென்றார்.

கடந்த சூறாவளியின்போது யாழ் மக்கள் எங்களுக்காக எவ்வளவுபெரும் உதவிபுரிந்தார்களோ அதேபோல நாமும் இன்று அவர்களின் துக்கத்தில் பங்கு கொண்டு எம்மால் இயன்ற உதவியைச்செய்ய முன்வரவேண்டும் என்றார்


## லேத் வேலையாள் தேவை

லேத் வேலையில் நன்கு அனுபவமுள்ளவர் உடனடியாக தேவை

அனுபவத்தையும் எதிர்பார்க்கும் ஊதியத்தையும் குறிப்பிட்டு. நற்சாட்சிப் பத்திரங்களுடன் கடித மூலம் விண்ணப்பிக்கவும்.

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



## நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

# பதவி வெற்றிடம்

1. தற்காலிக சில்லறை பண்டகசாலை முகாமையாளர் தரம் 3
2. சமயாசமய விற்பனையாளர்
3. தற்காலிக காவலாளி

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் அனுபவமுள்ள சங்க எல்லைப் பரப்பினுள் வசிப்பவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் 14-7-81க்கு முன் சங்கத் தலைமைக் காரியாலயத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

### 1. தற்காலிக சில்லறை பண்டகசாலை முகாமையாளர் தரம் 3

கல்வித்தகைமை: 6 பாடங்களில் பெற்றுள்ள க. பொ. த. ப. (சாதாரண) சித்தியும் ஒரு வருட கால அனுபவமும்

வயது: 18 வயதிற்கு மேற்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

பிணை; காசுப்பிணையாக சம்பளத்தின் 5 மடங்கும். ஆதனப்பிணையாக ரூபா 5000/-ம் செலுத்துதல் வேண்டும்.

சம்பளம்: $\frac{180 — 320}{8X18 — 10X6}$

### 2. சமயா சமய விற்பனையாளர்

கல்வித்தகைமை: 8-ம் தரக் கல்வித் தகைமை பெற்றிருத்தல் வேண்டும். உடல் உடையவராய் இருத்தல் வேண்டும்.

வயது; 18—30

சம்பளம்: நாள் ஒன்றுக்கு ரூபா 10/- வழங்கப்படும்.

அனுபவம்: ஆகக்குறைந்தது ஒரு வருட காலம் தனியார் ஸ்தாபனத்தில் இப்பதவியில் கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.

### 3. தற்காலிக காவலாளி

கல்வித்தகைமை; 5-ம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வயது: 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 60 வயதிற்கு இடைப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். (உடல் திடகாத்திரமானவராக இருத்தல் வேண்டும்)

சம்பளம்: நெறியாளர் குழுத் தீர்மானத்தின்படி வழங்கப்படும்.

பொதுமுகாமையாளர்,
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

30-6-1981. 0181

மணிவாக்கு

அநீதியால் அவஸ்தைப் படுவதைவிட, அநீதிசெய்வதுதான் இன்னும் அவமானகரமானது.
— பிளேட்டோ.

# நமது நோக்கு

## மலேசிய எம். பியின் முன்மாதிரி

"தண்ணீரிலும் பார்க்கத் தடிப்பானது இரத்தம்" என்பது ஆங்கிலப் பழமொழி.

இரத்தந்துடிக்குமல்லவா? என்பது எங்கள் நடைமுறைப் பேச்சு.

இதற்கு இலக்கணமானவர் கொழும்பில் நடைபெற்ற பொதுநல அமைப்புக் கருத்தரங்கில் கலந்து கொண்ட மலேசியப் பாராளுமன்ற எம். பி திரு அ. பொன்னையா அவர்கள்.

தமிழன் என்ற முறையிலும், ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் தலைமையில் நடைபெறும் சுதந்திர ஆட்சி முறையின் மனித உரிமைகள் காரணமாகவும் யாழ்ப்பாணத்தின் நிலைமையை அவர் நேரில் பார்வையிட முடிந்தது.

பொதுநல அமைப்புக் கருத்தரங்கின் குதூகலத்திற்கும், யாழ்ப்பாண நகரின் "வாண விளையாட்"டிற்கும் உள்ள வேறுபாட்டை தேசபக்தன், தமிழ் அபிமானி பொன்னையா நன்குணர்ந்தாரென்பதை நாம் இரசிக்கின்றோம்,

இடிமுழைபோல் உரை நிகழ்த்தும் நம் நாட்டின் தலைவர்கள் போலல்லாமல் செயலில் உடனடியாக இறங்கியுள்ளார் தமிழ்ப் பெருமகன் பொன்னையா. யாழ்ப்பாணப் பொதுநூலகம் திருத்துவதற்கு 50,000 ரூபாவை வழங்க வாக்களித்திருக்கிறார்.

அதுமட்டுமல்ல, நூரப் பாதுகாப்புபற்றி இப்பெரியார் கூறிய அரிய ஆலோசனைகள் அனுபவரீதியாக அமைந்தன.

மலேசியாவில் திறமையாகத் தொழிற்படும் தனியான பாதுகாப்புச் சேவை, நகரில்மட்டுமல்ல, கிராமங்களிலுமே உத்தியோக அந்தஸ்துடன் 15 வருட காலமாக வெற்றிகரமாக நடைபெறுவதாகக் கூறியிருக்கிறார். தொண்டர்படையின் அவசியத்தை நாம் இதுகாறும் அலட்சியம் செய்துவந்தது எங்கள் அரசியல் வறுமையைப் பறைசாற்றுகின்றன.

திரு. பொன்னையாவின் மிகச்சுவையான தகவல் மலேசியாவில் நடைபெற்ற கலவரத்தைப்பற்றியதே! 1965ம் ஆண்டு அங்கு நடைபெற்ற கலவரத்தின் வாழ்வு 24 மணித்தியாலங்களே! வாழ்வின் சந்நிதியத்தை விளக்க அங்கும் கடைகள், கார்கள் அக்கினிக்கு அர்ப்பணிக்கப்பட்டதாகச் சொன்ன திரு பொன்னையா், பொது நூலகமும், பத்திரிகைக் காரியாலயமும் அக்கதிக்குள்ளாகவில்லை என்ற வற்புறுத்தியிருக்கிறார்!

இதில் நூதன மேது முண்டு? இஸ்லாமிய நாடாகிய மலேசியாவில் தமிழும் சைவமும் தழைத்தோங்குவதானால், கலை, கலாசாரத்துக்கு நிங்கு விளைய இடமேது? மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்ட சைவ சித்தாந்த பீடத்துக்குப் பொறுப்பாகப்போகுவதவி வருபவர்கள் மலேசியாவின் தமிழ், சைவமக்களென்றால் வேறென்ன சாட்சி வேண்டும்?

பெருந்தன்மை கொண்ட திரு பொன்னையாவின்முன் மாதிரி இந்தநாட்டு வள்ளல்களுக்கும், வெளிநாட்டுப் பேரன்பர்களுக்கும் முன்மாதிரியாகவிருந்தால் யாழ் நூலகம், யாழ். நகரம் புதுப்பொலிவுடன் தேறிறமளிக்கும்நாள் தூரத்திலில்லை!

## தாயும் சேயும்

'தாயும் சேயும்' என்ற தலைப்பு இந்தியாவையும் இலங்கையையும் குறிப்பிடுவதாக வாசகர்கள் நினைப்பது இடல்பு இருந்தும் அந்த வர்ணனை இன்று சுதந்திர இலங்கைக்கு ஓரளவுக்குப் பொருத்த மற்றது

'தாயும் பிள்ளையுமென்றாலும் வாயும் வயிறும் வேறு' என்பது பொருத்தமானது கொழும்பில் நடைபெற்ற பொது நல அமைப்புக்கருத்தரங்கில் இந்தியப்பாராளுமன்ற எம்பிக்களுக்கு 'உங்கள் வேலையைப் நீங்கள் பாருங்கள்' என்ற எச்சரிக்கை தேவையற்றதாயிருந்ததை இது நிரூபிக்கின்றது.

நாம் இங்கு குறிப்பிட விரும்புவது இலங்கை சுதந்திரக்கட்சிக் கூட்டத்தில் நடந்தேறிய விவகாரங்கள் பற்றியது

சுதந்திரக்கட்சியின் சிரமைப்பில் மிதவாதத்தினர் வெற்றி பெற்றிருப்பது விரும்பத்தக்கது. திரு. அனுரா பண்டாரநாயக்காவது தாயார் சிறிமாட்டண்டாரநாயக்காவின் கொள்கையை எதிர்த்து வெற்றி பெற்றது கொள்கையளவில் வரவேற்கப்பட வேண்டியது. இது மட்டுமல்ல தாயும் மகனுமாயிருந்த போதும் குடும்ப ஆதிக்கமல்ல; கொள்கை ஆதிக்கம் என்பதை வலியுறுத்துகின்றது

குடும்ப ஆதிக்கமானால் தாயும் மகளும் மருமகனும் வெற்றி பெற்றிருக்கலாம்.

இந்தியாவிலும் தாயும் மகனும் என்ற இணைப்பு பூரணமாகிவிட்டது. தியாகத்தின் சிகரத்தை எட்டிய திருமதி இந்திரா நேருவுக்கு துணையாக மீண்டும் ராஜீவ் காந்தி மக்களால் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். இங்கு தாம் தியாகத்தின் சின்ன மென்பதை வற்புறுத்தும் சிறிமாவுக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட அனுரா, தன்தந்தை — அமரர் பண்டாரநாயக்காவின் பாக்கி வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியுமானால் மகன் தந்தைக்கு ஆற்றும் உதவியாகவும் ஈன்ற பொழுதிற் பெரிதுவந்த தாயார் சான்றோரெனக் கேட்கும் வாய்ப்பு மூண்டு

மனோதத்துவபேரறிஞர் பிராய்ட் (Freud) அடிப்படைக் கருத்திற்படியும் தாய்க்கும் மகனுக்கும் கூடிய கவர்ச்சியுண்டு. எனவே திருமதி பண்டாரநாயக்கா கவலைப்பட அவசியமில்லை.

சுதந்திரக்கட்சியில் மிதவாதம் மேற்பட்டிருப்பதால் அது எதிர்க்கட்சியாகவோ இன்றைய ஆட்சியில் தமிழ் மக்களின்பிரச்னைக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகள் நல்கி, ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் ஆட்சி காலத்திலேயே நன்மை கிட்ட உதவ வேண்டும்.

## கதிர்காமக் கந்தா நீ வா வா வா

கதிர்காமக் கந்தா நீ வா வா வா
கருணை நிதியை அள்ளித் தா தா தா.
வெதி ரோகருங் காவகத் தோய்! வா வா வா
வேண்டுகின்றோம் வேண செல்சைம் தா தா தா.
எதிரொருவர் இல்லா தோய் வா வா வா
இலம் பைகள் திரவருள் தா தா தா.
கதிர் வடிவேற் கந்தா நீ வா வா வா
காசினி மேல் வாழவருள் தா தா தா.

— கவியரசு, வெண்பாமணி முருகசூரியன்

## இன்று பெருவிழா
## வேதனைகளை வெல்வதற்கு மடுஅன்னையைத் துதிப்போம்

தமிழ் கொஞ்சு மண்ணின் அருள் விஞ்சு மருதமடு மாதா பெருவிழா மக்கள் மனவிழா வாக இன்று கொண்டாடப்படுகிறது. தமிழ் - சிங்கள - முஸ்லிம் என்ற வேறுபாடுகளை மறந்து ஒரே இறைவனின் ஒரே குழந்தைகளாக இலங்கை மக்களை இணைய வைக்கும் பெருமை மருதமடுவின் தனிச் சிறப்பு. இந்த இணைப்பே வாழ்வாகிவிட்டால் இலங்கையில் மிருகத்தனங்களுக்கு இடமில்லாமல் போய்விடும். ஆனால் மனிதனுக்கே உரிய சுயநலம் மிருகவெறியென எண்டன மனிதனைத்தாக்கி மனிதத்தன்மையைப் பலவீனப்படுத்தி தீயுமிழும் பேய்களாக மனிதனை மாற்றி விடும் வரலாறுகளை நாம் கண்டிருக்கிறோம். இவை தாம் மனிதனின் வரலாறு என்றால் பின்னர் மதங்களோ தெய்வமோ போற்றப்படுவதில் அர்த்தமின்றிப் போய்விடும்.

## — பற்றிமாகரன் —

மறைந்து நிற்கும் பரம்பொருளை இயங்கும் மனிதனில் காண்பதுதான் கிறிஸ்தவம் கடவுளைப் போற்றுவதாகும் மனிதனைபோற்றுமனிதனை மனிதனுகை கண்டால தான் இறைவனை இறைவனுக உணரலாம். இந்த அன்பு வெளிப்பாட்டிற்காகக் கிறிஸ்து சிலுவையில் தன்னையே உடைத்து தன்னையே பகிர்ந்திட இந்தத் தியாகத்திற்கு - தன்னல மறுப்புக்கு - தன்னையே துணையாக்கிய தாயின் பரியன்னையின் பெருமை. ஆகவே மனிதனையும் மனிதசோகங்களையும் தன்குணர்ந்த அன்னை மனித பலவீனங்களை வெல்லுவதற்குக் கூறும் ஒரே ஒரு வார்த்தை "அவர் (கிறிஸ்து) உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" என்பதே.

இவ்வார்த்தையைச் சிறிஸ்துவிடம் இருந்து புதுமைவரம் வேண்டி நின்ற மக்களுக்கே கூறினார். ஆம் கானவூர்க் கலியாணத்தில் பந்திக்கு ரசமின்மை மக்கள் துயருறுகிறார்கள். தானுகவே வலிய வந்து அருள்செய்யும் அன்னை நிலை கண்டு யேசுவிடம் "இரசம் தீர்ந்துவிட்டது" என்கிறாள். கிறிஸ்துவோ "அம்மா அதை ஏன் என்னிடம் கூறுகிறீர்? எனது நேரம் இன்னும் வரவில்லை" என்கிறார். அன்னையோ மக்களைப் பார்த்து "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" என்கிறள். அவர்கள் அன்னையின் சொற்களை நடைமுறைப்படுத்துகிறார்கள். இறைவனின் ஒழுங்கமைப்புக்கு அப்பற்பட்ட முறையில் அருள் செயல் பிறக்கிறது. இரசம் பெருகிறது.

இது போன்றே கிறிஸ்து கூறியவைகளை செய்யுள்ளள் என்ற அன்னையின் வழி நடப்பவர்கள் உலகின் வழமைகளைப் புறங்கண்டு இன்றும் புதுமை பெறுகின்றனர். எனவே மருதமடு அன்னையின் அருள் வேண்

(5ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### ஏசுவார்கள்; எரிப்பார்கள்!

யாழ்ப்பாணத்தின் பெருமையைப் பறைசாற்றுவதில் யாழ்ப்பாண பொது நூலகம், 'ஈழநாடு' பத்திரிகை, நவீன சந்தை, மணிக்கூண்டுக்கோபுரம் ஆகிய நான்கும் முக்கியமானவை. இதில் மணிக்கூண்டுக்கோபுரத்தைத்தவிர, ஏனைய மூன்றும் எரிக்கப்பட்டன.

'ஈழநாடு' யாழ்ப்பாணத்தின் தேசிய சொத்து அரசவிளம்பரங்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையில், அது மக்களுக்குச் சேவை செய்வதையே நோக்காகக்கொண்டு வெளிவந்துகொண்டிருக்கிறது

அத்தகைய இலட்சிய பத்திரிகை நிறுவனம், அரசியல் தூண்டுதலால் எரிக்கப்பட்டது என்ற செய்தி கேட்டு மனம் வருந்தினேன் சம்பவம் நடந்தபின் வந்த காலைப் பொழுதில் நானும், என் ஆத்ம நண்பன் சு. பரமேஸ்வரனும் (இவரே துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டவர்) சாம்பர் மேடாகக் கிடந்த 'ஈழநாடு' அலுவலகத்தைப் பார்த்து நெஞ்சு நொந்தோம்.

அன்றைய பொழுது எனக்கு நன்கு அறிமுகமான பதில் ஆசிரியர் திரு. பெருமாள் நின்றபோதும், எவருடனும் கதைக்கப் பிடிக்காத மனக்கனத்த நிலையில் வீடு திரும்பினேம்.

யோகர்சுவாமி சொன்னபடி ஏசுவார்கள், எரிப்பார்கள்; உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்.

உங்கள் பணி வாழ்க! வளர்க! என மனம் நிறைந்து வாழ்த்துகிறேன்.

வடகோவை வரதராஜன்

## நாடும் நடப்பும்

யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவங்கள் - (சம்பவங்களா?-) அட்டூழியங்கள்பற்றி பொலிஸ் உயர் மட்டக் குழுவொன்று யாழ்ப்பாணத்துக்கு வந்து விசாரணை செய்து திரும்பியிருக்கிறதல்லவா? இந்தக் குழு முன் சாட்சியமளிப்பதற்குப் பலர் சென்றனர். இதனால் பயன் கிடைக்குமோ கிடைக்காதோ என்பது வேறு விஷயம். நல்ல மனிதர்கள் முன் தங்கள் கஷ்டங்களை எடுத்துச் சொல்வதனால் மனப்பாரம் குறையும்; சற்று ஆறுதல் ஏற்பட்டிருக்குமல்லவா?

ஒரு நாள் தனது கஷ்ட நஷ்டங்களைச் சொல்வதற்கு ஒரு இளைஞர் சென்றிருந்தார். தனியில் காயம் அவருடைய வாக்குமூலத்தைப் பதியும்படி ஒரு பொலிஸ் அதிகாரி பணிக்கப்பட்டார். அவர் ஒரு அறையில் வாக்குமூலத்தைப் பதிவு செய்தகொண்டிருந்தார். வாக்குமூலம் அளித்த இளைஞர் மேசையின் முன்னால் நின்று கொண்டிருந்தார்! இதை அந்தப்பக்கம் வந்த பொலிஸ் கப்ரின்டென்ட் திரு கிங்லி விக்கிரமசூரியா கவனித்துவிட்டார். உடனே அந்தப் பொலிஸ் உத்தியோகத்தரிடம் ஏன் அவரை நிற்கவைத்திருக்கிறீர்; உடன் ஒரு நாற்காலியை எடுத்து அவரை அமரச் செய்யும்!' என்று பணித்தார்.

திரு கிங்லி விக்கிரமசூரியா 1977-ம் ஆண்டு யாழ்ப்பாணம் அல்லோலகல்லோலப்பட்டு பொதுமக்களுக்கும் பொலிசாருக்குமிடையில் ஐயமும் அச்சமும் நிலவிய காலத்தில் இரு தரப்பினருக்குமிடையில் நல்லெண்ணத்தையும் நல்லுறவையும் ஏற்படுத்துவதில் வெற்றி கண்டவர்.

சமீபத்தில் அவரை நான் சந்தித்தபோது இங்கு நடந்த சம்பவங்களையிட்டு மிகவும் கவலையடைந்தார். பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் நல்லுறவை ஏற்படுத்துவதில் தாம் வெற்றிகண்ட ஓரளவு முயற்சி கூட இப்போது நாசமாகி விட்டதே என்பது அவரது மனக்கவலை!

சென்ற மாதம் எட்டாம் தேதி திங்கட்கிழமை யாழ். நகரில் சந்திகளிலும் வீதிகளிலும் ஆயுதந் தாங்கிய இராணுவத்தினர் காவல் புரிந்தனர். இராணுவப் பொலிசாரும் ரோந்து புரிந்தனர். பொலிசார் ஜீப்பில் அங்குமிங்கும் திரிந்தனர். கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன.

மக்கள் கூட்டம் கூட்டமாக நின்றனர். ஒரு பதட்ட நிலை நிலவியது. அன்று மாலை அவசரகாலநிலை நீக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டது. மறுநாள் ஒன்பதாம் தேதி செவ்வாய்க்கிழமை நகரின் இராணுவ, பொலிஸ் நடமாட்டம் எதுவும் இருக்கவில்லை கடைகள் திறக்கப்பட்டன. நகரம் சகஜ நிலைக்குத் திரும்பியது.

இதுபற்றி வேடிக்கையாக திரு. கிங்லி விக்கிரமசூரியாவிடம் கூறியபோது உண்மை தான் ஆயுதப் படைகளின் நடமாட்டம் இல்லையானால் அமைதி நிலவும் என்றார் சிரித்துக்கொண்டே!

யாழ். மாவட்ட அரசாங்க அதிபராகச் சிறிது காலம் கடமையாற்றிய திரு. லயனல் பெர்னாண்டோவை இன்று நினைக்காத தமிழ் நெஞ்சங்களே இல்லை! இந்தச் சம்பவத்தின்போது அவர் இங்கிருந்தால் நிலைமை இவ்வளவு மோசமாகியிருக்காது என்பதே பலரும் வாய்விட்டுச் சொல்லும் வார்த்தைகள்!

-ஊர்சுற்றி

# ஆப்கான் பிரச்னையை தீர்க்க சர்வதேச மாநாடு

லண்டன் ஜூலை 1

சோவியத்யூனியனை ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறச் செய்து அதன் சுதந்திரத்தை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி ஐரோப்பிய பொதுச்சந்தை நாடுகள் பிரிட்டனை கேட்டுள்ளன.

ஆப்கானிஸ்தான் பிரச்னைக்கு தீர்வுகாணும் சர்வதேச மாநாடொன்றை கூட்டுவதற்காக சோவியத்யூனியனின் ஆதரவை பெறும் பொருட்டு பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் திரு. கரிங்டன்பிரபு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாஸ்கோவிற்கு விஜயம் செய்யவுள்ளார்.

மாஸ்கோவில் இவர் சோவியத் தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி ஆப்கானிஸ்தான் விவகாரம் சம்பந்தமான சர்வதேசமாநாட்டில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்வார்.

ஒன்பது நாடுகள் கலந்துகொள்ளும் இச்சர்வதேசமாநாடு எதிர்வரும் அக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டன், சீனா, சோவியத்யூனியன், அமெரிக்கா, ஈரான் இந்தியா உட்பட ஒன்பது நாடுகள் இம் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளன. (வெ)

# உலகில் கெடுபிடி யுத்தம் மூளும் சாத்தியக் கூறுகள்

## ஜனாதிபதி பிரஷ்னெவ் கருத்து

மாஸ்கோ ஜூலை 1

''உலகில் புதிய கெடுபிடி யுத்தம் மூளக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றது. ஐரோப்பாவில் நடுத்தர அளவிலான அணு ஆயுதங்களை கட்டுப்படுத்துவதில் அமெரிக்கா தாமதமாக விருந்து வருகிறது.''

மேற்கண்டவாறு சோவியத் ஜனாதிபதி திரு. பிரஷ்னெவ் மூன்றாவது மேற்கு ஜெர்மனி அதிபர் திரு. வில்லிபிராண்ட்டிற்கு அளித்த விருந்துபசாரத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

''சோவியத்யூனியன் அணு ஆயுதத்தை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும் அமெரிக்கா அதை அலட்சியம் செய்கிறது.

''அமெரிக்கா அதன் அணு ஆயுத உற்பத்தியையும் விற்பனையையும் கட்டுப்படுத்தாவிட்டால் உலகம் பெரும் யுத்த அபாயத்தை எதிர்நோக்க நேரிடும்'' என்றார். (வெ)

# அசாமில் ஜனாதிபதி ஆட்சி

கௌகாத்தி ஜூலை 1

அசாம்மாநில அமைச்சரவை ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து அங்கு ஜனாதிபதி ஆட்சிமுறை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அசாமில் வெளிநாட்டவர் பிரச்னை தொடர்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது சுமார் 29? பேர் பலியானார்கள்

அசாமில் இந்திராகாங்கிரஸ் கட்சியின் சிறுபான்மை அரசாங்கத்திற்கு அளித்து வந்த ஆதரவை இடது சாரிக்கட்சிகள் வாபஸ் பெற்றதைத் தொடர்ந்து திருமதி அன்வரா தைமூர் தலைமையிலான அமைச்சரவை மூன்று தினங்களுக்கு முன்னர் ராஜினாமாச் செய்தது தெரிந்ததே (வெ)

# "பல்கலைக்கழகங்கள் பெருகியும் மாணவர் அனுமதி குறைகிறதே"

## பரி. யோவான் கல்லூரி அதிபர் கவலை

[சரியாலை]

''உயர்கல்வி, சர்வதேசரீதியில் திடீர்மாற்றம் அடைந்து வருகிறது. உயர்கல்விக்கான வசதிகள் பலநாடுகளில் அதிகரிக்கப்பட்டுள்ளன கடந்த நாற்பது ஆண்டுகளுக்குள் ஐக்கிய இராச்சியத்தில் சர்வகலாசாலைகளின் எண்ணிக்கை மூம்மடங்காக அதிகரித்துள்ளது''

இவ்வாறு யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் கல்லூரி அதிபர் திரு. செ. ஆனந்தராஜன் கல்லூரியின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரியின் முன்னாள் மாணவரும், யாழ்ப்பாண அரசாங்க அதிபருமான திரு. டி. ஹொரிசிங்டன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இப் பரிசளிப்பு விழாவில் கல்லூரி அதிபர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

### வெறுப்பூட்டும் அனுமதி முறை

1918-ம் ஆண்டுக்கு முன்பாக ஒரு சதவீத இளைஞர்களே பல்கலைக்கழகம் சென்றனர் ஆனால் இன்றோ இத்தொகை பத்து சதவீதமாக அதிகரித்துள்ளது. எமது நாட்டில் பல்கலைக்கழகங்களின் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளபோதிலும், அனுமதிக்கப்படும் மாணவரின் தொகையோ குறைவாகவே உள்ளது பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களில் ஐந்து சதவீதமானோர் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றனர். இதிலும் தகுதி அடிப்படையில் முப்பது வீதத்தினரும் மாவட்ட அடிப்படையில் ஐம்பத்தைந்து சதவீதத்தினரும் பதினைந்து சதவீதத்தினர் பின்தங்கிய பிரதேச அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுகின்றனர். இந்த நடைமுறை முன்னைய அரசாங்கம் கடைப்பிடித்த தரப்படுத்தல் முறையிலும் பார்க்க மிகவும் வெறுப்பூட்டுவதாக அமைகிறது பாடங்களில் நல்ல பெறுபேறுகளும் உயர்ந்த கூட்டுத் தொகையும் பெற்ற தரமுள்ள பல மாணவர்கள் மாவட்ட அடிப்படை காரணமாகப் பல்கலைக்கழகப் பிரவேசம் பெறமுடியாத கவலை தரும் காட்சியை பெற்றோரும் ஆசிரியர்களும் இன்று காண்கின்றோம். மாவட்ட அடிப்படைத் தெரிவு காரணமாக பல்கலைக்கழகங்களுள் புகுவோரில் ஐந்து சதவீதத்தினர் மட்டுமே யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த மாணவர் ஆவர். இந்த தெரிவு முறையினால் தகுதி பெற்ற பல மாணவர்களுக்கு அனுமதியில்லாமல் அவர்களுடைய காலம் வீணாக்கப்படுவது எம் நாடு போன்ற அபிவிருத்தியடையாத நாடுகளுக்குப் பெரு நஷ்டமாகும்.

இலங்கை வைத்திய சேவை அத்தியட்சகர் வைத்திய கலாநிதி எச். ஏ. யேசுதாசன் பரிசளிப்புவிழா உரையை நிகழ்த்தினார்.

வைத்திய கலாநிதி திருமதி கமலா யேசுதாசன் பரிசில்கள் வழங்கினார். (அ)

# "எதிரிக்கும் எனக்கும் பழைய பகைமை உண்டு"

## கொலை முயற்சி வழக்கில் சாட்சியம்

[புலோலி நிருபர்]

''வீட்டு மதிலின் மேலால் பந்துபோன்ற பொருள் ஒன்று வந்து விழுந்தது எரிந்து வெடித்தபோது நான் மதில்மீது ஏறிப்பார்த்தபோது இரண்டாம் எதிரி குணசீலன் இன்னுமொரு பந்து போன்ற பொருளை வீட்டுக்குள் எறிந்ததைக் கண்டேன்''

இவ்வாறு வல்வெட்டித்துறை கைக்குண்டு வீச்சு கொலைமுயற்சி வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த வல்வெட்டித்துறை ஊறணியைச்சேர்ந்த சக்திவேல் (வயது 31) கூறினார்.

1979 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 6ம் திகதி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை பகீரதன், தாமோதரம்பிள்ளை சண்முகவேல், தாமோதரம்பிள்ளை தயாளினி ஆகிய மூவருக்கும் பயங்கர ஆயுதமான கைக்குண்டுவீசிக்காயம் விளைவித்ததாகவும், விசாகரத்தினம் சக்திவேல் என்பவருக்கு கைக்குண்டு வீசிக்காயம் விளைவிக்க முயற்சித்ததாகவும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சோதிலிங்கம் சோமசுந்தரம், புனிதானந்தசாமி குணசீலன், கதிரவேற்பிள்ளை ஜெயசந்திரபோஸ் ஆகியோருக்கு எதிராக வல்வெட்டித்துறைப் பொலிசார் வழக்குத்தாக்கல் செய்திருந்தார்கள்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு கே எஸ் மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

சக்திவேல் தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:

''1979 அக்டோபர் 5ம் திகதி எனக்கு நல்ல ஞாபகமுண்டு. அன்றுகாலை 10 மணியளவில் நான் எனது தாய் தகப்பன், சகோதரி, மைத்துனர் ஆகியோருடன் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்குச் சென்றிருந்தோம். நண்பகல் ஒரு மணியளவில் நாங்கள் ஆலயத்திலிருந்து வீடு வந்து சேர்ந்து விட்டோம். அப்போது அயல் வீட்டில் அதாவது எனது சகோதரி வீட்டில் 'ஐயோ ஐயோ' என்ற சத்தம் கேட்டது. உடனே, நானும் எனது தயார் தெய்வநாயகமும் அங்கு ஓடிச்சென்றோம். அன்றைய தினம் சுமார் 12 மணியளவில் நானும் எனதுதாயாரும் சகோதரி யமுனகாந்தாவும் எங்கள் வீட்டுவாசலில் கதைத்

[5-ம் பக்கம் பார்க்க]

# சர்வதேச திரைப்பட விழா ஏழாம் திகதி ஆரம்பம்

மாஸ்கோ ஜூலை 1

இம்மாதம் 7ம் திகதி முதல் 21ம் திகதி வரை சர்வதேச திரைப்பட விழா இங்கு நடைபெறவுள்ளது மாஸ்கோ சர்வதேசத் திரைப்பட விழா உலக திரைப்படத் துறையின் ஒரு முக்கிய நிகழ்வாகியுள்ளது.

1959ம் ஆண்டு முதன்முதலில் இத்தவிழா நடைபெற்றபோது 48 நாடுகளே பங்குகொண்டன. 1979ம் ஆண்டில் இத்தொகை 102 ஆக உயர்ந்துள்ளது. நாடுகளைத் தவிர ஐ. நா., யுனெஸ்கோ. பலஸ்தீன விடுதலை ஸ்தாபனம், இலிதேசபக்த இயக்கம் போன்ற ஸ்தாபனங்களும் இவ்விழாவில் கலந்துகொள்ளுகின்றன.

ஆசிய, ஆபிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகளின் திரைப்பட நெறியாளரான மிருணால் சென், இத்திரைப்பட விழாவில் கலந்துகொள்கிறார்.

# இராஜகோபால் மரணம் கொலை என தீர்ப்பு

## சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

[புலோலி]

மர்மமரணமடைந்த துன்னாலைவாலிபர் இராஜா இராஜகோபாலின் மரணம் கொலை என்று மரணவிசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் தீர்ப்பளித்துள்ளார்.

இவ்வருடம் மேமாதம் 19ம் திகதி இவ்வாலிபர் துன்னாலை அமெரிக்கமிஷன் பாடசாலையில் இளைக்கயிறு ஒன்றில் தொங்கிக் கொண்டிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டார்.

இறந்த இவ்வாலிபரின் மரணம்பற்றிய ஸ்தல விசாரணைகளை மேற்கொண்ட வடமராட்சிப்பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு தி. வேலுப்பிள்ளை பகிரங்கத் தீர்ப்பு வழங்கி. இம்மரணம் சம்பந்தமாகப் பொலிசாரைத் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டிருந்தார்.

பொலிசார் இம்மரணம் சம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் சி. சுப்பிரமணியம், மா. சின்னத்தம்பி, வ சரவணபவா ஆகிய மூவரையும்கைதுசெய்து பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ், மகேசன் முன்னிலையில் ஆஜர்செய்தபோது சந்தேகநபர்கள் மூவரையும் நீதவான் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார். பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு கே, எஸ். மகேசன் முன்னிலையில் இம்மரண விசாரணை நடைபெற்றது. நீதவான் இவ்வாலிபரின் மரணம் கொலை எனத் தீர்ப்பளித்ததுடன் சந்தேகநபர்களை இம்மாதம் 9ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

# இளம் ஆசிரியையை அவமானப்படுத்தினராம்

## இளைஞருக்கு விளக்க மறியல்

(புலோலி)

பஸ்ஸில் பிரயாணம்செய்து கொண்டிருந்த இளம் ஆசிரியையை மானபங்கப்படுத்திய இளைஞரொருவர் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். இரு இளைஞர்களைத் தேடிப்பொலிசார் வலைவீசியுள்ளனர்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றும் செல்வி சண்முகநாதன் சிவாதேவி என்பவர் கல்லூரி முடிவடைந்ததும் துன்னாலை வடக்கு கரவெட்டியிலுள்ள தனது வீட்டிற்குச் செல்வதற்காகப் பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து வந்து கொடிகாமம் பஸ்ஸில் இருந்தபோது பஸ்ஸில் இருந்த மூன்று இளைஞர்கள் ஆசிரியையை இருக்கவிடாமல் தடுத்து, தூஷணவார்த்தைகளால் ஏசி மானபங்கப்படுத்தினராம் பஸ் ஓடத்தொடங்கியதும் ஆசிரியையின் கையைப்பிடித்து இழுத்ததால் பயமடைந்த ஆசிரியை பஸ்ஸிலிருந்து இறங்கி மந்திகையிலுள்ள கடைபொன்றில் தஞ்சமடைந்தாராம்.

இத்தகவல் பருத்தித்துறைப் பொலிசாருக்குக் கிடைத்ததும் சார்ஜன்ட் ஜனப் எம் ரி எம். உவைஸ், கான்ஸ்டபிள் விஜயரத்தின ஆகியோரடங்கிய பொலிஸ் கோஷ்டி ஸ்தலத்திற்கு விரைந்து பருத்தித்துறையைச் சேர்ந்த மாணிக்கம் யோகச்சந்திரனைக் கைது செய்தது.

பொலிசாரைக் கண்டதும் ஏனைய இரு இளைஞர்களும் ஓடித்தலைமறைவாகியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர் பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ் மகேசன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது நீதவான் அவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார். மற்ற இரு இளைஞர்களையும் தேடிப் பொலிசார் வலைவீசியுள்ளனர்.

# நிர்வாகிகள்

(கொழும்பு)

அகில இலங்கை பொது சௌக்கிய பரிசோதகர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த மாதம் 27ந் திகதி கொழும்பு சேரி கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்- டபிள்யூ எச் சாள்ஸ், உப தலைவர்கள்- டபிள்யூ எஸ் திஸநாயக்கா, கே ஏ பி கிரியல்ல, காரியதரிசி- டி எஸ் ஆர் பீரிஸ், உப காரியதரிசிகள்- ஜி எவ் டி வீரசூரிய. ஏ ஏ ரெம்பட்லி, பொருளாளர்- டபிள்யூ ஏ கே சோதிசேன, உப பொருளாளர்- எஸ் ஜி டி ஹெற்றிகே. (ந)

வெலிங்டன் (யாழ்நகர்)
10 30, 2-30 6-00, 9-30
ஜெமினிகாந்த் - லதா
ஆயிரம் ஜென்மங்கள்

லிடோ யாழ். நகர்
10 30, 2-30, 6-00, 9-30
அழியாத கோலங்கள்
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

WINDSOR (Jaffna) TODAY ONLY
10-30 a.m 2-00, 4-30, 7-00 and 9-30 p. m. only
Cam and Eddie have just witnessed a murder...
but there's no one they can tell...
because in this town the copes are the killers!
"MOVING VIOLATION"
Color—A Fast Packed Action Thriller
6-7-81 "The Last Hart Men"

6 வது ஜனத்திரள் வாரம்!
சாந்தி (யாழ் நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி, விஜயா
தர்மராஜா (கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00 9-30
★ சிவாஜி ★ ஜெய்சங்கர் ★ ஸ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
சட்டாக்கத்தி பைரவன்
(வண்ணப்படம்)

மனோகரா தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
(யாழ்ப்பாணம்)
நாகேஷ் - ஜெயந்தி - சௌகார் ஜானகி
எதிர்நீச்சல்

இன்று மட்டும்
ராணி தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
ரஜனிகாந்த் ★ ஸ்ரீபிரியா ★ சௌகார் ஜானகி
மகாராஜா சுரேஷ் கூட்டுத்தயாரிப்பு
தீ
3-ந் திகதி முதல் எம்.ஜி.ஆர்.-ஜெயலலிதா
எங்கள் தங்கம்

RAJAH Jaffna Daily 10-30, 2-00, 4-30
7-00 and 9-30



Bruce Lee
Fighting his way
to
fame with his
New Martial Arts

Golden Harvest's
Presentation
of the year

It tells the
struggle of an
overseas
Chinese Leader

BRUCE LEE
MARIAYI

Thailand's leading
Actress
MALARIN

THE BIG BOSS
(Scope and Color)
Adults only வயதுவந்தவர்களுக்கு மட்டும்

## சிறுவர் நூலகம் நாளை திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்றக் கட்டிடத்தின் கிழக்குப் பக்கமாகவுள்ள அறையில் தற்காலிகமாக நூலக சிறுவர் பகுதியும், வாசிப்புப் பகுதியும் நாளை 3-ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு திறந்து வைக்கப்படும்.

## கதிர்காமம் பற்றிய ஆங்கில நூல்

(கொழும்பு)

கதிர்காமம் பற்றிய ஆங்கில நூலொன்றினை திரு. ஆறுமுகம். இராசையா எழுதி அச்சிட்டு ஒப்பேற்றியுள்ளார்.

இந்நூல் வெளியீட்டு விழா வெள்ளிக்கிழமை 3-ம் திகதி மாலை நடைபெறும்.

கதிர்காம தேவஸ்தான பஸ்நாயக்க நிலமை எ. எம். ஜெயவர்த்தன இந்நூலினை பக்தர்களுக்கு வழங்கி, வெளியீட்டு வைபவத்தினைத் தொடக்கி வைப்பார்.

இந்நூல் 57 படங்களைக் கொண்டது நூல் ஆங்கிலத்தில் அமைந்த போதிலும், படத்தின் விளக்கங்கள் தமிழிலும், சிங்களத்திலும் அமைந்துள்ளன.

## எதிரிக்கும்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

துக் கொண்டிருந்தோம். அப்பொழுது எங்கள் வீட்டு மதிலின் மேலாக வீட்டிற்குள் பந்து போன்ற பொருள் வந்து எரிந்து விழுந்து வெடித்தது உடனே நான் சுவரால் ஏறிப்பார்த்த போது எதிரி குணசீலன் இன்னுமொரு பந்து போன்ற பொருளை வீட்டுக்குள் எறிந்தார். நான் சுவரால் ஏறி வீட்டுக்கு வெளியே வந்து பார்த்தபோது 2ம் எதிரி குணசீலனும் 1ம் எதிரி சோமசுந்தரமும் ஓடினார்கள் சற்றுத் தூரத்தில் இன்னுமொரு நபர் ஓடிக்கொண்டிருந்தார். அவரை நான் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை அந்த நேரத்தில் எனது தயார் 'ஐயோ ஐயோ' என்று குளறிக் கொண்டிருந்தார்.

தயார் குளறிய சத்தம் கேட்டு நான் வீட்டிக்குள் போனபோது தயாளினி, டகிரதன், சண்முகவடிவேல் என்ற மூன்று மருமக்களும் காயப்பட்டிருந்ததைக் கண்டேன். அதன் பின்னர் யமுனா காந்தாவும் அவருடைய கணவர் தாமோதரம்பிள்ளையும் காயப்பட்ட மூன்று பிள்ளைகளையும் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றார்கள் அதன் பின்தபார் தெய்வநாயகமும், தம்பி இராசசேகரமும் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றார்கள். எதிரிகளுக்கும் எனக்குமிடையில் பழைய கோபமுண்டு."

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள்
எஸ். எஸ்.ஆர் - விஜயகுமாரி
அவன் பித்தனா

வெஸ்லி,
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
அரசிளங்குமரி

நாகம்ஸ் (சுன்னாகம்)
4-45, 7 00, 9-45
சனி.ஞாயிறு 2-30
DIRTY HARY
MARY CRAZY

## உலகவங்கியின் புதிய தலைவர்

வாஷிங்டன் ஜூலை 1

உலக வங்கியின் புதிய தலைவராக அமெரிக்கவங்கியின் முன்னாள் அவரினர் திரு. போஷன் நியமிக்கப்பட்டுள்ளார்.

உலகவங்கியின் தலைவராக பதின் மூன்று வருடங்கள் கடமையாற்றிய திரு. மக்னமாரா தமது பதவியிலிருந்து இன்று ஓய்வு பெறுகிறார். (வே)

## வைத்தியசாலை திருத்த வேலைகள்

[மண்டைதீவு]

மண்டைதீவு அரசினர் வைத்தியசாலை திருத்தவேலைகள் யாழ்ப்பாணம் கட்டிடத்திணைக்கள ஊழியர்களால் கடந்த சிலநாட்களாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## கிணற்றுள் தவறி விழுந்து வயோதிபர் மரணம்

[மண்டைதீவு]

வீதியோரத்திலுள்ள பாழடைந்த கிணற்றுக்குள் தவறி விழுந்து வயோதிபர் ஒருவர் மரணமானார், மண்டைதீவு கடற்கரை வீதியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை என்பவரே இவ்வாறு மரணமானவராவர்.

## வேதனைகளை....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டின் அவன் கூறுவது போல் கிறிஸ்துவின் சொற்களைச் செயலாக்கல் வேண்டும் கிறிஸ்துவின் சொத்து ஒரு மதத்துக்குரியவை அல்ல. கிறிஸ்து தியாகத்தின் மூலம் தன்னைச் சிலுவையில் உடைத்தார். ஒவ்வொரு மனிதனும் இலட்சியத்துக்காகத் தன்னை உடைக்கவேண்டும் என்றார். கிறிஸ்து பல சோதனைமணிகளாலான அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து இது என் சரீரம் என்று பிட்டுக்கொடுத்தார். ஆம் மனிதன் பகிரப்படவேண்டும் தன் ஆற்றல் அறிவு செல்வநிலை அனைத்திலுமே பகிர்ந்து வாழவேண்டும் எனப்படிப்பித்த கிறிஸ்து இதை என் நினைவாகச் செய்யுங்கள்" எனவேண்டுகோள்விடுக்கிறார். ஆகவே ஒவ்வொருமனிதனும் இலட்சியங்களாகத் தன்வாழ்வை உடைத்து சகோதரத்துவத்திற்காகத் தன்னையே பகிரவேண்டும். இதுதான் அவர்கூறும் மொழி. இதுவே கிறிஸ்துவின் ஞான நிலைப்பாடான "தேவநற்கருணையின்" பொருள். தேவநற்கருணையில் தான் முழு மனிதனாக உயிரோடும் உடலோடும் வீற்றிருந்து உங்களைக் கண்காணிப்பேன் - பராமரிப்பேன் - பாதுகாப்பேன் என்பது அவரின் வாய்மொழி. ஆகவே மடுஅன்னையின் அருள் வேண்டின் "அவர் கூறிய தெல்லாம் நாமும் செய்வோம்" இதிக் எமக்கு ஏற்படும் சோதனைகளை வேதனைகளை வெல்வதற்கு அன்னையினை நோக்கி செபமாலை சூட்டுவோம். அன்னை அருள்வாள் ஆண்டவன் அருளுவான். அன்னையின் மக்களும் நலன் பெறுவர். வாழ்க மடு அன்னையின் திருநாமம்!

## அலுவலகக்கதவு உடைக்கப்பட்டது

(மண்டைதீவு]

மண்டைதீவு பெரும் தெருக்கள் திணைக்கள அலுவலக அறைக்கதவு நேற்று முன்தினம் இரவு இனம் தெரியாதவர்களால் உடைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து வேலைத்தல மேற்பார்வையாளர் திரு. அ. தேவரட்ணம் யாழ். பொலிசில் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து பொலிசார் விசாரணையில் ஈடுபட்டுள்ளார்கள்;

## நிதிசேர்க்க தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

தேசிய சௌஜன்யத்துக்கான தேசியக்குழு எரிந்துபோன யாழ்ப்பாண நூல் நிலையத்தைப் புதுப்பிப்பதற்காக நிதியொன்றை ஆரம்பிக்கவிருக்கிறது.

அண்மையில் நடந்த குழுவின் கூட்டமொன்றில் இதற்கான ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## கட்டிக்கொடுக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சங்கானையில் அண்மையில் இடம்பெற்ற வன்செயலின்போது தீக்கிரையாக்கப்பட்ட வீட்டினை திரும்பவும் கட்டிக்கொடுப்பதற்கான முயற்சியில் யாழ் மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. நடேசு ஈடுபட்டுள்ளார்.

இவ்வீட்டினை திரும்பவும் கட்டிக் கொடுப்பதற்கான நிதி சம்பந்தமாக திரு நடேசு வட்டுக்கோட்டை லயன்ஸ்கழக தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்தியதன் பேரில் சில ஸ்தாபனங்கள் மூலமாகவும் நிதி உதவி புரியவிருப்பதாக வட்டுக்கோட்டை லயன்ஸ்கழகத் தலைவர் வாக்குறுதி அளித்துள்ளாராம். [மா]

## பயிற்சி முடிப்பு

[மண்டைதீவு]

தேசிய கூட்டுறவு டிப்ளோமாப் பயிற்சி வகுப்பு தற்போது ஒன்பது மாதங்களாக நீடிக்கப்பட்டுள்ளது. இதன் 'பொல்கொல' கூட்டுறவு மத்திய கல்லூரியின் பாடத்திட்டத்திற்கமைய மேற்படி பயிற்சியை நடாத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது என்று தேசிய கூட்டுறவுச்சபையைச் சேர்ந்த உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## மணவாளக் கோல அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டை ஸ்ரீமுனீஸ்வரன் கோவில் வருடாந்த மணவாளக்கோல அபிஷேகம் இன்று வியாழக்கிழமை தொடக்கம் 26- திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் மாலை நடைபெறும்.

தமிழ்மணி எஸ் கணேசசுந்தரம் திருவிளையாடற்புராணம் பற்றி தொடர் இன்னிசை விரிவுரையாற்றுவார். [மா]

## என் வீட்டை

(2ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த பொலிசும் அவர்களுக்கு அறிவித்தனர்,

இவ்வாறு திரு, யோகேஸ்வரன் மிக உருக்கமான தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை விபரித்தபோது கேட்டுக் கொண்டிருந்த பெண்கள் பலர் கண்ணீர் வடித்தனர். பல இளைஞர்களும் இளம் பெண்களும் "அட்டூழியங்களை முடிவு கட்டுவோம்" என பலமாக கோஷமிட்டனர், கூட்டம் முடிவடைந்ததும் இளைஞர்கள் பலர் திரு. யோகேஸ்வரனை சூழ்ந்து கொண்டு ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்தனர், அப்பொழுது அந்த இளைஞர்களிடம் "இவைகளிலும் பார்க்க கூடிய ஆபத்துக்களையும் சேதங்களையும் நாம் சந்தித்தால் தான் விடுதலை பெறமுடியும்" என கூறினார், எதிர்காலத்தில் இளைஞர்கள் எப்படி எமது விடுதலைப்பயணத்தை நடத்திசெல்லவேண்டும் என விளக்கமாக இளைஞர்களிடம் கூறியதாகவும் அறியப்படுகிறது.

## ★ யாழ். பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் ★

# இருபது லட்சம் ரூபா மோசடி:

## விசாரணை. ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாநகர பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் சுமார் 14,000 ரூபா உணவு முத்திரை மோசடி தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது.

விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், இத்தொகை மேலும் கூடுதலாக இருக்குமென்றும் கூறப்படுகிறது.

இதேசமயம் திரு. அல்பிரட் துரையப்பா யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவராக இருந்த காலத்தில் நடந்ததாக கூறப்படும் 20 லட்சம் ரூபா கூப்பன் புள்ளி மோசடி பற்றியும், விசாரணை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. [சு]

## ரூ. 3 ஆயிரம் தந்திக்கம்பி திருட்டு

(பண்டத்தரிப்பு)

பொன்னாலையில் சுமார் மூவாயிரம் ரூபா பெறும்திமிக்க தந்திக் கம்பிகள் இரவுவேளையில் திருடப்பட்டுள்ளது. இதுபற்றி தந்தித் தொடர்புத் திணைக்களம் சங்கானை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்து சங்கானைப் பொலிசார் இரவு வேளையில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

### வ. போ. ச. ஓய்வு பெற்ற ஊழியர்

## சேமலாபநிதி பத்திரங்களை அனுப்புமாறு கோரிக்கை.

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய போக்குவரத்துச் சபையிலிருந்து இளைப்பாறிய ஊழியர்களின் சேமலாபநிதிப் பத்திரங்களை உடனடியாக, சம்பந்தப்பட்ட காரியாலயத்திற்கு அனுப்பி வைக்குமாறு வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் பணித்துள்ளார்.

சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் இவ்விடயமாக வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவரைச் சந்தித்து ஊழியரின் நிலைமையை விளக்கிக் கூறியதைத் தொடர்ந்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. [சு]

## பருத்தித்துறையில் நாளை உண்ணாவிரதம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட வன்செயல்களைக் கண்டித்தும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் விடுத்துள்ள 5 அம்சக் கோரிக்கைகளை ஆதரித்தும் நாளை வெள்ளிக்கிழமை பருத்தித்துறைத் தொகுதியைச் சேர்ந்த குடத்தனை கண்ணகை அம்மன் கோவிலில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் உண்ணாவிரதம் இருக்கவுள்ளனர்.

இதற்கான ஒழுங்குகளைத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் குடத்தனை வடக்குக் கிளையினர் செய்துள்ளனர்.

நாளைக் காலை ஆறு மணி தொடக்கம் மாலை ஆறு மணி வரை உண்ணாவிரதம் நடைபெறவிருக்கிறது.

பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம் இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைப்பார்.

மாலை 6 மணிக்கு உண்ணாவிரதம் முடிந்து, பருத்தித்துறை எம். பி. தலைமையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம், யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன், யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. என். தம்பிமுத்து, திரு. மாவை சேனாதிராசா உட்படப் பலர் உரையாற்றுவர். [மா]

## பல்லவராயன்கட்டு கூ. கிளை தலைவர் சிவா'வுக்கு மகஜர்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் முடிவுகளின்படி 7ம் இடத்தை வகிக்கவேண்டிய கிளிநொச்சித் தொகுதி வேட்பாளர், 11-ம் இடத்தில் இருப்பது குறித்து, தமிழர் விடுதலைக் கூட்டணியின் பல்லவராயன்கட்டுக் கிளை கவலை தெரிவித்து, கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரத்துக்கு மகஜர் ஒன்று அனுப்பிவைத்துள்ளது.

அம்மகஜரில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் முடிவுகளின்படி கிளிநொச்சித் தொகுதி 21,007 வாக்குகளைப் பெற்று 7-ம் இடத்தையடைந்துள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் பத்து வேட்பாளர்களும் குடாநாட்டிற்குள் வசிப்பவர்களாகவுள்ளனர். கிளிநொச்சித் தொகுதி வேட்பாளர் 11-ம் இடத்தில் உள்ளது யாவரும் அறிந்ததே.

தேர்தலுக்குமுன் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கம் 'தேர்தல் முடிவின்படி எந்தத் தொகுதி அதிகளவு வாக்குகளைப் பெறுகிறதோ அங்ஙனமே பெயர்ப்பட்டியல் மாற்றஞ்செய்யப்படும்' என அறிக்கைவிட்டிருந்தார்.

கிளிநொச்சித் தொகுதி பல குடியேற்றங்களை உள்ளடக்கியதாகும். மற்றைய பத்துத் தொகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் அவர்கள். போக்குவரத்து, வறுமை, சுகாதாரம் போன்ற கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு வாழ்கின்றார்கள். அவர்களின் கஷ்டங்களை நன்குணர்ந்த தொகுதி வேட்பாளரை யாழ். அபிவிருத்திச் சபையில் இடம்பெறச்செய்து கிளிநொச்சித்தொகுதி மக்களை நல்வாழ்வுக்கு வழிகாட்ட உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்''

இதன் பிரதிகள் த. வி. கூ. செயலாளர்நாயகம் திரு. அமிர்தலிங்கம், கிளிநொச்சி எம்.பி. திரு. வி. ஆனந்தசங்கரி ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. [மா-இ]

## நீர்வேலியில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

றும் கூறவில்லை. எந்த இலாகாவைச் சேர்ந்த ஜீப்என்றும் மனோகரன் சொல்லவில்லை. மனோகரன் என் காரியாலயத்திற்கு முன்னால் உள்ள வீட்டில் வசிக்கிறார்.

''இரவு 8-20 மணிக்கு நான் கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு போன் பண்ணினேன். பொறுப்பதிகாரி கதைத்தார். ஜீப் ஒன்றுவந்து பரமேஸ்வரன் என்பவரை ஏற்றிச்செல்வதாக கூறினேன். அதுபற்றி தனக்கொன்றும் தெரியாது என்று சொன்னார்.

மறுநாள் தேர்தல் தினம். அன்றுகாலை 7 மணிக்கும் 7-30 மணிக்குமிடையில் கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எனக்கு போன் பண்ணினார். பரமேஸ்வரனின் சடலம் நீர்வேலியில் றோட்டுக்கு அருகில் கிடப்பதாக தான் அறிந்துள்ளதாகத் தெரிவித்தார். வேறு ஒருவரும் இதுபற்றிக் கூறவில்லை''.

கோப்பாய் பொலிஸ் நிலைய துப்பாக்கிச்சன்னப் பதிவேடும், வாகன நடமாட்டப் பதிவேடும் நீதிமன்றத்தில் காட்டப்பட்டன.

விசாரணை இம்மாதம் 8ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது' (சு)

## அமிருக்கு.....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழாராய்ச்சி மகாநாட்டுப் பிரிவுபசார விழாவில் கௌரவ உறுப்பினரும் எதிர்க் கட்சித் தலைவருமானவர் பேசியதாக 17-1-81 ம் திகதிய 'தினத்தந்தி' பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளமையினாலும் இக்கூற்றுக்களை கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் மறுக்காமையினாலும் இப்பாராளுமன்றம் அவரது நடவடிக்கையைக் கண்டிக்கிறது. எனவே அவர் மீது நம்பிக்கை இல்லை என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது. [ம-இ]

## அரசுக்கு எதிரான...

[1-ம் பக்கத் தொடர்ச்சி

களைத் தடுக்கப்போதிய நடவடிக்கை எடுக்கத்தவறியதன் மூலமும் ஆள்மாருட்டத்தின் பொருட்டு அகப்பட்டவர்கள் ஐ. தே. க. அரசியல் வாதிகளின் தலையீட்டினால் பொலிஸ் காவலிலிருந்து விடுவிக்கப்பட்டமை மூலமும் ஆள்மாருட்ட ஊழலுக்கு ஊக்கமளித்தமையினாலும்—

### யாழ். மாவட்டத்தில்...

[6] யாழ் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கில் வாக்களிக்க வந்த வாக்காளர்கள் அரசினால் செய்யப்பட்ட வாக்களிப்பு ஒழுங்குகளில் நிலவிய குழப்ப நிலை காரணமாகத் தமது வாக்குரிமையைப் பூரணமாக நிறைவேற்றமுடியாது தடுக்கப்பட்டமையினாலும்—

[7] சீரற்ற வாக்களிப்பு ஒழுங்குகளினால் ஏற்பட்ட குழப்பநிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர், காணி காணிஅபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் ஆகியோரின் பணிப்புக்கள் வழிகாட்டல்களின்கீழ் பலஅரசு அலுவலர்கள் யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும் தேர்தல் மோசடிபுரிய முயற்சித்தமையினாலும்—

[8] மேற்கூறிய இரு அமைச்சர்களாகிய இரு அரசியல்வாதிகளும் தெரிவுஅத்தாட்சி அலுவலரின் அதிகாரங்களை தமதாக்கிக்கொண்டதன்மூலம் தேர்தல் அலுவலரினதும் சுதந்திரத்தையும் நடுநிலைமையையும் அவமதித்தமையினாலும்--

[9] தெரிவு அத்தாட்சி அலுவலரினால் ஏற்கனவே நியமிக்கப்பட்ட சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் நீக்கப்பட்டு ஐ. தே. க-வின் கட்டுப்பாட்டில் உள்ள ஜாதிக சேவக சங்கமய, தேசிய தோட்டத்தொழிலாளர் யூனியன் ஆகிய இரு தொழிற்சங்கஉறுப்பினர்களை-- தமிழில் தேர்ச்சியற்ற--பெரும்பாலும் சிங்கள அலுவலர்களை சிரேஷ்ட தலைமைதாங்கும் உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டமை ஆகிய தவறுகளைச்செய்துள்ளமையினாலும்-

### 'ஈழநாடு' அலுவலகம் அச்சகம் தீக்கிரை...

1981 மே 31 முதல் ஜூன் 8-ம் திகதி வரையிலான காலப் பகுதியில் பொலிசாரின் ஒரு பகுதியினர் யாழ்ப்பாணத்தில் பல வாகனங்கள், கட்டிடங்கள், கடைகள், யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினரின் இல்லம், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமையலுவலகம், 'ஈழநாடு' பத்திரிகை அலுவலகம், அச்சகம், யாழ். பொதுசன நூல்நிலையம் ஆகியவற்றைத் தீயிட்டு எரித்து அரிய விலை மதிக்க முடியாத நூல்களையும் கையேடுகளையும் அழித்ததோடு கொள்ளையிடுதல் போன்ற வன்செயலோடு வன்செயலைக் கட்டவிழ்த்துவிட்டமையினாலும்-

பொலிசாரும் ஆயுதப்படையினரும் யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும் எதுவித காரணமுமின்றி அப்பாவி மக்களைச் சுட்டுக் கொன்றமையினாலும் பொலிசாரும் ஆயுதப்படையினரும் வன்செயல்களையும் அட்டூழியங்களையும் புரிவதை தடுப்பதற்கோ நிறுத்துவதற்கோ முடியாமல் அரசு படுதோல்வி அடைந்தமையை காணி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் அரசின் சார்பில் ஜூன் 9-ம் திகதி பாராளுமன்றத்தில் உரைநிகழ்த்துகையில், இந்த அழிவுச்செயல்கள் சிலவற்றுக்கு பொலிசார் காரணமாக இருந்தனர் எனவும் அரசை இப்பழியிலிருந்து விடுவிப்பதற்காக தம்மால் கட்டுப்படுத்த முடியாமற்போய்விட்டதென ஏற்றுக்கொண்டமையினாலும்,

### எதிர்க்கட்சித் தலைவர் கைது...

ஒரு அங்கீகரிக்கப்பட்ட கட்சிச் செயலாளர் நாயகமும், எதிர்க்கட்சித் தலைவருமானவர் கைதுசெய்யப்பட்டமை மூலம் மேற்படி தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ கடமைகளைச் செய்யவிடாது தடுத்தமையினாலும்--

தேர்தலில் பங்குபற்றிவர்களிக்கும் அவர்களது ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி.க்கள் கைதுசெய்யப்பட்டமையினாலும் ---

இவற்றின் மூலம் அட்டூழியங்களை மேற்கொண்டமையினால் அரசின் மீது நம்பிக்கை இல்லையென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது, [மா-இ]

## பஸ் தரிப்பிடங்கள் மாற்றம்

[யாழ்ப்பாணம்]

காரைநகர் டிப்போவைச் சேர்ந்த, 786 784, 782 பாதை இலக்க பஸ்கள் தரிக்கும் இடங்கள் நேற்றுத் தொடக்கம் யாழ். பஸ் நிலையத்தின் கிழக்குப் பக்கமாகவுள்ள கடைசி பஸ்தரிப்பு நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளன.

இதுவரை காரைநகர்டிப்போ பஸ்கள் நின்ற இடத்தில் கொழும்புத்துறை (790), பிறவுண் றோட் [808] பஸ்கள் தரித்துநின்று புறப்படுகின்றன. யாழ். பஸ் நிலையத்தின் மற்றும் சில தரிப்புகளும் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளன.

பிரயாணிகளின் சௌகரியத்தைக் கொண்டே இந்த ஏற்பாட்டைச் செய்ததாக யாழ். பஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். சவரிமுத்து தெரிவித்தார். — [மா]

## கொலைவழக்கு

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் கொலை வழக்கு நேற்று யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இம்மாதம் 22ம் தேதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் கோப்பாயில் 81ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1ம் தேதி அ. காசிநாதரை கொலைசெய்ததாகவும், நா. அம்பலவாணர், அ. சிவலிங்கம் ஆகியோருக்கு காயம் விளைவித்ததாகவும், எஸ். நீலமோகன், எஸ். தில்லைநாதன், வி. செல்லத்துரை, எஸ். விஜயகுமார் ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். தவராசா, சட்டத்தரணி சி. சிவநேசனின், உதவியுடன் ஆஜரானார். வழக்காளி தரப்பில் சட்டத்தரணி கே. வி. எஸ். சண்முகநாதன் பொலிஸாரின் உதவியுடன் ஆஜரானார். [சு]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 303ம் இலக்கத்திலுள்ள காலநிலைய அச்சகத்தில் 981ம் ஆண்டு ஜூலை மாதம் 2-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper at the General Post Office SrLanka
Regd No. QR 100288/81 P. O. Box 49. Jaffna. தந்திலிக தொலைபேசி 7707